بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# HUMILIATION OF A PHARMICIST WHO HUMILIATED THE RECIPIENT OF DIVINE REVELATIONS

# ஒரு அஹ்மதி பார்மஸிஸ்ட்டுக்கு ஏற்பட்ட அவமானம்

**(இக்காலகட்டத்தின் கலீஃபத்துல்லாஹ்வும் இறைதூதரும், நபியும், மஸிஹூம், அமீரூல்மூமினினும் என்று வாதம் செய்கின்ற ஹஸ்ரத் முனீர் அஹ்மது அசீம் (அ) அவர்கள்மீது பொய் பிரச்சாரம் செய்து அவரை அவமானிக்க முயற்சித்த அஹ்மதியா ஜமா-அத்தை சார்ந்த குலாம் முஹமது ராஜபாலீ என்ற ஒரு பார்மஸிஸ்ட்டுக்கு இறைவனிடமிருந்து கிடைத்த அவமானத்தின் கதை).**

**''உனக்கு அவமானம் இழைக்க திட்டம் தீட்டுகின்றவனை நான் அவமானத்திற்கு ஆளாக்குவேன்''.** (2002 ஏப்ரல் 9-ம் தேதி ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து கிடைத்த ஒரு வெளிப்பாடு ஆகும்).

தங்களுடைய பிள்ளைகளின் மேல் கல்விக்காக அயல்நாடுகளில் அனுப்பிவைக்க பெற்றோர்கள் ஏராளமான தியாகங்கள் செய்கின்றன. அவ்வகையிலான ஒரு பெற்றோரின் முழுமையான தியாகம் வழியாக அல்லது காரணமாக குலாம் முஹமது ராஜபாலீ என்ற ஒரு அஹ்மதி, பார்மஸிஸ்ட் கல்விக்காக பாகிஸ்தானில் சென்றிருந்தார். அம்மகனில் இருந்து பெற்றோர்கள் முற்றிலும் சிறந்த பலனையும் வளர்ச்சியையும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அற்புதம் என்று கூறலாம், அது நிகழவில்லை. மாறாக, அம்மகன் பெற்றோர்களுக்கு மட்டுமின்றி அஹ்மதியா சமுதாயத்திற்கே வெட்ககேடான நிலையை உருவாக்கினான்.

ஒரு பார்மஸிஸ்டாக (மருந்து கடைகாரர்) பணிப்புரிந்து வந்த குலாம் முஹமது ராஜபாலீயின் லைஸ்சன்ஸ் இரண்டு தடவை ரத்து செய்ததின் காரணமாக தற்பொழுது பார்மஸி (மருந்துகடை) நடத்த முடியாத சூழ்நிலை உருவாகியிருக்கின்றது.

அவருக்கு இரண்டு பார்மஸிகள் (மெடிக்கல் ஸ்டோர்) இருந்தன. ஒன்று ''ரோஸ்ஹில்லீலும்'' மற்றொன்று ''காஸ்ட்டலீலும்''. இந்த பார்மஸிகள் நடத்திச் செல்ல அவரது சகோதரிகள் அவருக்கு உதவியாகயிருந்தார்கள். மருந்து வகைகள் வாங்க அஹ்மதிகள் அப்பார்மஸியில் செல்வது வழக்கமாகயிருந்தது. அந்நபர் ஒரு அஹ்மதி சகோதரன் என்ற நிலையில் ஜமாஅத்தின் மிஷனறிமார்களும் தங்களுக்கு நோய்ப்பாதிக்கின்ற நேரங்களில் மருந்துகளுக்காக அங்குதான் சென்றிருந்தனர். அன்று அஹ்மதியா ஜமாஅத்தின் முழுநேர மிஷனறியாக இருந்த ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம்(அ) அவர்கள் தப்லீக் தொடர்பான விஷயங்களுக்காக பன்நாடுகளிலும் சுற்றுவட்டார தீவுகளிலும் பயணம் மேர்கொள்ளும் வேளைகளிலெல்லாம் ஒரு எச்சரிக்கை என்ற நிலையில் உடம்பு வேதனை, காய்ச்சல், வாந்தி போன்ற நோய்களுக்கான மருந்து வகைகள் வாங்க இந்த பார்மஸியில் தான் சென்றிருந்தார். மற்று நாடுகளில் மருந்து வகைகள் விலைவாசி உயர்வானதால் ஜமா அத்தின் பணம் அதிகம் செலவு செய்யக்கூடாது என்ற நல்ல எண்ணமே இவ்வாறு செய்துகொள்ள

காரணமாகயிருந்தது.

இந்த பார்மஸிஸ்ட் ஆன குலாம் முஹமது ராஜபாலீ, இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவனது உண்மையான அடியானும் இந்நூற்றாண்டின் கலீஃபத்துல்லாஹ்கவும் ஆன ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம்(அ) மின் பகைவன் என்பது பிறகு வெளிவாக்கப்பட்டது.

அஹ்மதியா ஜமா அத்தின் முழுநேர மிஷனறி என்ற நிலையில் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம்(அ) அவர்கள் பல நாடுகளிலும் பல்வேறு தீவுகளிலும் சென்று அல்லாஹ்வின் ஏகத்துவத்தை குறித்தும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் தோற்றத்தை பற்றியும் மக்களை கற்பித்து, மாபெரும் புரட்சியை ஏற்படுத்திய வேளைகளிலெல்லாம் அஹ்மதிகள் பார்வையில் அவர் இறைமார்க்கப் போராளியாகவும் திறமைவாய்ந்த உழைப்பாளியாகவும் இருந்தார். மட்டுமின்றி அவர் மிக நல்லவர் என்றும் உண்மையாளர் என்றும் மதிப்பிற்கும் கண்ணியத்திற்கும் உரியவர் என்றும் ஐய்யமில்லாமல் அனுதினம் அவர்கள் கூறிவந்தார்கள்.

ஆனால், சில வேளைகளில் அவர் கடினமான வேதனைகளால் நொந்து போயிருந்தார். தாங்குமளவுக்கு அதிகமான தலைவேதனை, உடம்புவேதனை, தலைசுற்றல், இதயத்துடிப்பு அதிகரித்தல் போன்ற விஷயங்களால் அவர் சோர்ந்துபோயிருந்தார். இக்காரணங்களுக்காக மருத்துவர்கள் கூறிய மருந்து வகைகளுக்காக இந்த பார்மஸியில் அவர் பலமுறை சென்றிருந்தார்.

2001-ல் மளரிஷியாவின் அன்றைய அமீறின் தவறான தகவல்களின் அடிப்படையில் மறைந்து போன கலீஃபத்துல் மஸீஹ் நாலாமன், ஹஸ்ரத் முனீர் அஹ்மது அசீம் (அ) மீது நடவடிக்கை எடுத்தது, மேல் கூறிய அமீறின் தகவல்களை முன் வைத்து கொண்டே ஆகும். இந்த முன் அமீறின் கஸின் (மாமா மகன்) ஆவார் பார்மஸி நடத்தி வந்த குலாம் முஹமது ராஜபாலீ என்பவர். இந்நூற்றாண்டின் இறை தூதராகவும் நபியாகவும் அல்லாஹ்வே தேர்ந்தெடுத்து, அவனது தூய்மையான வெளிப்பாடுகளாலும் அருள்களாலும் போர்த்தியிருக்கும் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம்(அ) அவர்களை பொய்ப்பிக்கவும் ஏளனம் செய்யவும் இந்த அமீருக்கு உடந்தையாகவும் ஒத்துழைப்பாகவும் செயல்பட்டவரே ஆவார் குலாம் முஹமது ராஜபாலீ என்ற பார்மஸிஸ்ட்.

2000 மார்ச் மாதம் 8-ம் தேதி முதல் முனீர் அஹ்மது அஸீம்(அ) அவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து வெளிப்பாடு கிடைக்க ஆரம்பித்தது. எவன் ஒருவனின் கரங்களின்பாலோ அன்னாரின் வாழ்க்கையும் வெகுமதியும், உணவும், மரணவும் இருக்கின்றதோ அந்த சர்வவல்லவனாகிய அல்லாஹ் மீது ஆணையாக இதயதுடிப்பு அதிகரிப்பதும் கடினமாக உடம்பு வியர்ப்பதும் இறைவெளிப்பாடுகள் கிடைக்கின்ற வேளைகளிலுள்ள நிலையென்பது முதல் கட்டத்தில் அவருக்கு உணர்ந்து கொள்ள இயலவில்லை. அதனால் அவர் பார்மஸியில் சென்று அதற்கு தேவையான மருந்துகள் வாங்கி சாப்பிடவும் செய்து வந்தார்.

அந்த காலயளவில் அமீறுடன் சேர்ந்து ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம்(அ) சாஹிப்புக்கு எதிராக, அந்த பார்மஸிஸ்ட் பல பொய்கதைகளும் படைத்தார். அதாவது, முனீர்

அஹ்மது அஸீம் சாஹிப் போதைமாத்திரைகள் பயன்படுத்த கூடிய நபர் என்றும், நோயாளி என்றும், பைத்தியக்காரன் என்றும் பொய் பிரச்சாரம் செய்தார். அத்தோடு தவறான மருந்து வகைகளின் பட்டிகை தயாரித்து அதை போட்டோ காப்பி எடுத்து அஹ்மதிகளிடத்தில் விளம்பரவும் செய்தார்.

மறைந்து போன கலீஃபத்துல் மஸீஹ் நான்காமன் அறிவுக்கு இச்செய்தியை அவர்கள் எட்ட செய்தனர். ஆனால் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் சாஹிப்பிடத்தில் அதைக் குறித்த எவ்வித கேள்விப்பதிலுமின்றி அஹ்மதியா முஸ்லீம் ஜமாஅத்தின் தலைவராகிய மிர்ஸா தாஹிர் அஹ்மது சாஹிப் இவ்வாறு அறிக்கைவிட்டார். முனீர் அஹ்மது அஸீம் சாஹிப்புக்கு கிடைப்பது சாத்தானிக வெளிப்பாடுகள் ஆகும். அந்த சாத்தானிக வெளிப்பாடுகளில் எவரும் நம்பிவிட கூடாது என்றும் தெரிவித்தார். மட்டுமல்லாமல் இந்த அறிக்கையை விளம்பரப்படுத்த மௌரீஷியஸ் அமீறுக்கு கட்டளையிடவும் செய்தார். தனது கலீஃபாவின் கட்டளைப்படி இந்த அமீறும் அவரது சொந்தகாரனுமான குலாம் முஹமது ராஜபாலீ என்ற பார்மஸிஸ்டும் சேர்ந்து இவ்விஷயத்தை பிரச்சாரம் செய்தன. இத்தகை போதை மருந்துகளுக்கு அடிமைப்பட்டவர்கள் சம்பந்தமில்லாத காரியங்களைக் கூறுவார்கள் என்றும், காலம் சென்ற நபிமார்களை பார்த்தேன், பேசினேன் என்றும் சொல்வார்கள். இவ்வகைப்பட்ட ஒரு குழப்பத்திற்கு முனீர் சாஹிப் ஆளாக்கப்பட்டிருக்கின்றார் என்றும் உள்ள அவர்களின் பொய் பிரச்சாரத்தை அம்மக்கள் நம்பிவிட்டன.

இந்த பொய் பிரச்சாரங்கள் யாவும் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம்(அ) அவர்களை மிக வருத்தத்திற்கும் வேதனைகளுக்கும் ஆளாக்கியது. ஏராளம் அஹ்மதிகள் ஹஸ்ரத் முனீர் அஹ்மது (அ) மின் இடத்திற்கு வந்து, போதை மருந்தின் காரணமாக உனக்கு வெளிப்பாடுகள் கிடைக்கின்றதோ? என்றெல்லாம் கூறி அவரை பரிகசித்தார்கள். அவ்வேளைகளிலெல்லாம் இறைவெளிபாடுகள் அவருக்கு கிடைத்துக் கொண்டேயிருந்தது. அனுதினம் இறைவெளிப்பாடுகள் அவருக்கு இறக்கப்பட்டது.

பிறகு **“பிரவுன்சீ கோட்”** என்ற மனநிலை மருத்துவமனையில் ஹஸ்ரத் முனீர் சாஹ்ப்பின் ஒரு பயல் கண்டதாக ஒருவர் பொய் சாட்சியளித்தார். ஹஸ்ரத் முனீர் அஹ்மது அசீம் (அ) மீது இரண்டாவதாக அவர்கள் படைத்த இந்த பொய்கதையும் அஹ்மதிகளிடத்தில் பரவியது.

2001 ஜனுவரி 1-ம் தேதி புது வருடப்பிறப்பில் அன்றைய அஹ்மதியா கலீஃபா மிர்ஸா தாஹிர் சாஹீப் அவர்கள் நிஸாமே ஜமா அத்தில் இருந்து ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அ) மை வெளியேற்றினார். உண்மையில் **“பிரவுன்சீ கோட்”** என்ற மருத்துவமனையில் சிகிட்சைக்காகவோ அல்லது எதாவது நோயாளிகளை சந்திக்கவோ முனீர் அஹ்மது அசீம் (அ) அவர்கள் சென்றதே கிடையாது. அதிக நேரங்களிலும் அவர் நீயூனியன், ரோட்றிகட், மயோட்டி, செஜில்லீஸ் என்ற தீவுகளிலேயே மார்க்க வேலைகளில் ஈடுபட்டிருந்தார். இழந்து போன ஆன்மாக்களை உண்மையான இஸ்லாமின் வழியில் திரும்பக்கொண்டுவரவேண்டிய வேலைகளிலேயே அவர் முழுகியிருந்தார். அவர்கள் பிரச்சாரம் செய்து வந்த விஷயங்களில் எதாவது உண்மையிருந்தால் இந்த மார்க்க வேலைகளுக்காக ஒரு பைத்தியக்காரனை எப்படி

அஹ்மதியா ஜமா அத்தின் தலையகம் நியமிப்பார்கள்?. தனது ‘‘தஅவா’’ (இறைவன்பால் மக்களை அழைக்கும்பணி) வேலைகளில் எப்படி அவர் வெற்றிபெறுவார். ஒரு மனநிலை குழப்பமான நபர் மக்களை இஸ்லாமில் இருந்து அகற்றசெய்வார் என்று அவரை நியமித்தவர்கள் பயப்பட வேண்டுமல்லவா?

அவர்கள் சங்கமாக சேர்ந்து வகுத்த இம்மோசமான திட்டத்தை ஜமா அத்தின் எல்லா பகுதிகளிலும் பிரச்சாரம் செய்தார்கள். இந்த பொய்வாதியின் சாத்தானிக வெளிப்பாடுகளிலும் வார்த்தைகளிலும் எவரும் சாய்ந்து விடக்கூடாது என்றும் அதற்கு மாறாக செயல்பட்டால் நிஸாமே ஜமாஅத்தில் இருந்து முனீர் அஹ்மது அஸீம் சாஹ்ப்பை வெளியேற்றியது போன்று உங்களையும் வெளியேற்றப்படும் என்றும் அவர்கள் ஒவ்வொரு அஹ்மதிகளையும் மிரட்டினார்கள். ஆனால், அனைத்தையும் வெல்லுகின்ற அல்லாஹ், தானே தேர்ந்தெடுத்த தனது தூதனுக்கு அவமானம் இழைக்க முயற்சிப்பவர்களை அதேபடி அவமானிக்க ஒரு பொழுதும் தாமதம் காட்டுவதில்லை.

ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம்(அ) மின் மீது பொய் பிரச்சாரம் நடத்தி அவரை ஏளனம் செய்ய முயர்ச்சித்தவர்களை, அதேப்படி அல்லாஹ் அவமானத்திற்கு ஆளாக்கியிருக்கின்றான். ஜமாஅத்திற்கும் இஸ்லாமிற்குமாக வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கின்றோம் என்று எண்ணிய அவர்களின் பிள்ளைகள் இப்போது போதை மருந்துகளுக்கு அடிமையாகி விட்டார்கள். ஒருதினம் கூட மது அருந்தாமல் இருக்க முடியாத நிலை அவர்கள் புதல்வர்களுக்கு உருவாகிவிட்டது. மட்டுமல்ல, செக்ஸ் புத்தகங்கள் வியாபாரம் செய்யும் தொழில்களிலும் அவர்களின் மக்கள் ஈடுபட்டிருக்கின்றன.

ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம்(அ) மீது தவறான செய்தியளித்து அவரை ஏளனத்திற்கு ஆளாக்கசெய்ய முயற்சித்த அந்த அஹ்மதி பார்மிஸ்ட் குலாம் முஹமது ராஜபாலீயை எப்போது, எப்படி தண்டனைக்கும் இளிவுக்கும் ஆளாக்க வேண்டும் என்பதை பற்றி மிக நன்றாக அறிந்தவன் அல்லாஹ் மட்டுமே. பாருங்கள், திருட்டுதனமான வியாபாரங்கள் நடத்தி வந்த குலாம் முஹமது ராஜபாலீயின் பார்மஸி 2010 ஜனுவரி 07-ம் தேதி சோதனை செய்யப்பட்டது. தொடர்ந்து ராஜபாலீயின் பெயர் பார்மிஸ்டுகளின் ரஜிஸ்ட்டரில் நின்று வெளியேற்றப்பட்டது. இக்காலகட்டத்தின் கலீஃபத்துல்லாஹ் ஆன ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அ) பிறப்பு மாதவும் பிறப்பு தேதியும் ஜனுவரி 07 ஆகும். அதே நாளில் நிகழ்ந்த இவ்விஷயவும், எதிர்பாராமல் நடந்ததா? இல்லை அல்லாஹ்வின் கட்டளைப்படி நிகழ்ந்ததா?

இதைக்குறித்து சிந்தியுங்கள். மேல் கூறிய தேதியில் பார்மஸி போர்டில் இருந்துள்ள பரிசோதனைகள் மட்டுமின்றி கள்ளகடத்தலுக்கு எதிரான சோதனை சங்கவும் காஸ்டலீவுள்ள அவரது பார்மஸியில் பரிசோதனை நடத்தினார்கள். அவரின் ஸ்டோர் முறியில் இருந்து போதைமருந்துகளும், கள்ளக்கடத்தல் பொருட்களும் பிடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அவரின் லைஸன்ஸ் ரத்தாக்கப்பட்டது. பார்மஸி நடத்தி செல்லவேண்டிய அனுமதி தடைசெய்யப்பட்டது. ஜமாஅத்தே அஹ்மதியாவுக்கு இது ஒரு அவமானமல்லவா? இந்த பார்மஸிஸ்டின் குடும்பத்தை சார்ந்தவர்களுக்கு இது வெட்கக்கேடான விஷயமல்லவா? இந்த பார்மஸிஸ்டுகளின் (மாமா மகன்) ஆன மௌரிஷியஸின் முன் அமீர், அவரின் அதிகாரத்தை

பயன்படுத்தி செய்த அனீதியின் விளைவாக அவரை அஹமதியா ஜமாஅத்திருந்து முழுமையாக தூக்கிவீசவில்லைய? அல்லாஹ்வின் தூதனை அவமானிக்க முயற்சித்தவர்களை அல்லாஹ் எவ்வாறு அவமானித்தான் என்று பாருங்கள். இதுவே அல்லாஹ்வின் நடைமுறை ஆகும்.

அல்லாஹ்வின் தூதனின் மீது பொய்கூறி அவரை ஏளனம் செய்ததற்கு பதிலாக 10 வருடங்களுக்கு பிறகு அல்லாஹ் அந்த பார்மஸிஸ்டை அவமானிக்கச் செய்தான். ஏராளமான பொய்கள் கூறி, தவறான சான்றுகளும் மருந்து வகைகள் பட்டியல் தயாரித்து இறைதூதரை ஏளனம் செய்யவும் பொய்பிக்கவும் முயற்சித்த குலாம் முஹமது ராஜபாலீயின் நிலை இன்று எவ்வாறு ஆயிற்று? அல்லாஹ்வின் தூதரின் வார்த்தை மெய்யும் தூய்மையும் என்று நிரூபிப்பதற்காக அல்லாஹ்வே அந்த பார்மஸிஸ்டுக்கு அவமானத்தை இழைத்தான். இறையடியானும் இறைதூதனுமாகிய ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம்(அ) அவர்களை எவ்வாறெல்லாம் இழிவுப்படுத்த அவன் (ராஜபாலீ) முயற்சித்தானோ அதே வகையிலான இழிவுக்கு அவனே ஆளாகிவிட்டான். சட்டத்திற்கு மாறாக போதை மருந்துகள் வியாபாரம் செய்த பெரிய குற்றத்திற்கு குலாம் முஹமது ராஜபாலீ பிடிக்கப்பட்டான். அக்காரணத்தால் அவனது லைஸன்ஸ் ரத்தாக்கப்பட்டது. இறை தூதரின் பகைவனாக மாறியதின் விளைவாக அவன் எல்லாவிதமான பரிகாசங்களுக்கும் குறிக்கோள் ஆகிவிட்டான்.

மௌரிஷியாவின் தினபத்திரிகையான L'Express- ல் ஒரு செய்தி கூட கடந்த நாள்களில் வெளிவந்தது. அப்படி மக்கள் மத்தியில் கூட வெளிப்படையான ஏளனத்திற்கு குலாம் முஹமது ராஜபாலீ ஆளாகிவிட்டான் (2014 பிப்ரவரி 15 சனிக்கிழமை) வெளிவந்த பத்திரிகையில் அச்செய்தி காணலாம்.

''பார்மாஸிஸ்டுகளின் பட்டிகையில் இருந்து வெளியேற்றப்பட்ட காஸ்ட்டல் பார்மஸி மேலாளர் குலாம் முஹமது ராஜபாலீக்கு, பார்மஸி குழுவின் தீர்மானத்தை எதிர்த்து முறையீடு செய்யலாம். நேற்றைய நாள் உச்சநீதிமன்றம் இந்த அறிக்கைவிடுத்துள்ளது. 2010 ஜனுவரி 7-ம் தேதி பார்மஸி குழுவின் இன்ஸ்பக்ட்டர்களும் போதை மருந்து தடுப்பு இயக்கவும் இணைந்து அப்பார்மஸி சோதனையிட்டு அதன்படி வெளியிடப்பட்ட உத்தரவின்படி மருந்து விற்பனைக்காரர்களின் பட்டிகையிருந்து ராஜபாலீயை நீக்கம் செய்து அவரது லைஸன்ஸை ரத்தாக்கப்பட்டது.

2011 ஏப்ரல் 2-ம் தேதி பார்மஸி குழுவின் அறிவிப்பின்படி அவரது சஸ்பென்டை நீக்கம் செய்யப்பட்டதை தொடர்ந்து குலாம் முஹமது ராஜபாலீக்கு தனது லைசென்ஸ் திருப்பிக் கிடைத்தது. அதன்படி மறுபடியும் அப்பணியில் அவர் ஈடுபட்டுவந்தார். அதே நேரம், மருந்து வகைகள் கெட்டுபோகாமல் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை என்பதன் காரணமாக அவரது (ராஜபாலீ) பெயரில் மற்றொரு வழக்கும் கோர்ட்டில் நடந்து வந்தது. அவ்வழக்கில் அவர் குற்றத்தை ஒப்புக்கொள்ளவும் அதன் பெயரில் அவருக்கு ரூபாய் 20,000/- அபராதமாக விதிக்கப்பட்டது.



COUR

## Un pharmacien révoqué autorisé à se défendre

**RAYÉ** du registre des pharmaciens, Goolam Mohammad Rajabalee, gérant de *Castel Pharmacy*, a obtenu le droit de contester cette décision du *Pharmacy Board*. La Cour suprême a statué en ce sens hier.

Dans son affidavit, le plaignant soutient que le 7 janvier 2010, des inspecteurs du *Pharmacy Board* et de l'*Anti Drug and Smuggling Unit* (Adsu) ont inspecté la *Castel Pharmacy* et l'ont verbalisé. Dans le sillage, le pharmacien a été suspendu et sa licence enlevée.

Dans une lettre en date du 12 avril 2011, le *Pharmacy Board* l'informe que sa suspension a été levée et qu'il a récupéré sa licence. Il a donc repris du service. Entre-temps, il a été poursuivi devant la cour intermédiaire pour n'avoir pas pris des mesures de sécurité pour conserver des médicaments. Il a plaidé coupable et a été condamné à Rs 20 000 d'amende.

Le 27 avril 2012, Goolam Mohammad Rajabalee reçoit une lettre du *Pharmacy Board* l'informant que son nom a été enlevé du registre des pharmaciens et que sa licence a à nouveau été révoquée. D'où sa décision de réclamer justice devant la Cour suprême. Il a retenu les services de M[e] Vashish Bhugoo, avoué.

2012 ஏப்ரல் 27-ம் தேதி குலாம் முஹமது ராஜபாலீக்கு பார்மஸிக் குழுவில் நின்று வேறொரு அறிக்கை வந்தது, பார்மஸிஸ்டுகளின் பட்டிகையில் இருந்து ராஜபாலீயை நீக்கம் செய்ததாகவும் லைசன்ஸ் கேன்சல் செய்ததாகவுமான அறிக்கையாகும் அது. அதை தொடர்ந்தே ஆகும் உச்சநீதிமன்றத்தில் நீதியைத் தேடி செல்ல பிறகு தீர்மானித்தது. இவ்வழக்கை குறித்த சட்டவேண்டுகோளுக்காக “வாஷிஸ் பூகு” என்ற வழக்கறிஞர் உதவியை அவர் தேடியிருக்கின்றார்”. (L.Express Samedi - February 15, 2014).

வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமா அத்திற்கு இந்த நபர் வெட்ககேடான நிலையை உருவாக்க செய்தார். அவருக்கு புறக்கணிப்பு இல்லையா? ஜமா அத்துக்கு உள்ளே இப்போதும் நல்லபிள்ளையாகதான் இவர் தொடருகின்றாரோ? ஒரு பொழுதும் ஒரு நடவடிக்கையும் அந்நபருக்கு எதிராக உங்களால் எடுக்க முடியாது. ஆனால் அல்லாஹ் அவனை ஏளனத்திற்கு ஆளாக்க செய்திருக்கின்றான். இக்கால கட்டத்தில் அல்லாஹ்வின் கலீஃபாவான ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அ) மின் மீது அவன் போட்ட குற்றசாட்டுகளும் பரிகாசவும் அவர் மீதே வீழ்ந்தது.

இவ்விஷயத்தைப் போன்று அல்லாஹ்வின் தூதரை ஏளனம் செய்த மற்று நபர்களும் அஹ்மதியா ஜமா அத்தில் உண்டு. தனது தூதரை எவ்வாறு அவர்கள் ஏளனம் செய்தார்களோ அவ்வாறே அவர்களையும் அல்லாஹ் ஏளனத்திற்கு ஆளாக்கினான். நிச்சயமாக அல்லாஹ் நீதிமான் ஆவான். எவ்வாறு அவனது தூதரை ஏளனம் செய்கின்றார்களோ அவ்வாறே அவர்களின் மீது அவன் நடவடிக்கை எடுப்பான் என்பதில் சந்தேகமில்லை. இறைவனின் நடவடிக்கை என்பது உண்மையில் மனிதர்களின் நடவடிக்கையை விட மிக கடினமான வேதனை விளைவிக்கின்றதே ஆகும்.

அகில உலகையும் கட்டிக்காக்கும் அல்லாஹ்வுக்கு அனைத்து புகழும்.

ஜமா அத்துல் சஹிஹில் இஸ்லாம் இன்டர்நேஷ்னல்

பிப்ரவரி 25, 2014

Issued by R. Jamaludin Raother Amir (South Zone)
Jamaat Ul-SahihAl Islam, Kerala (Regd) India.
Email: jamal.raother@gmail.com
Web:www.jamaat-ul-sahih-al-islam.com
Phone: 09447001832

Translated by
**Azim Ahmad**
Sadr Sahibul Faraj
Kerala/ TamilNadu
E-mail: sahihazisulsat@gmail.com
Cell: 09789180817